Book Review

# சாவித்ரி பாய் ஃபூலே

**ஃபூலேவின் ஆசிரியர் முற்போக்குச் சிந்தனையும் பெண்கல்வி மீது அக்கறையும் சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்குபவராகவும் இருக்கிறார்**

து. சங்கர தேவி

பெண்கல்விக்காகப் பணியாற்றிய பெண் ஆசிரியரை மையமாகக் கொண்டது இப்புத்தகம். எளிய ஆங்கிலத்தில், நேர்த்தியான படங்களுடன் படக்கதையாக வெளியிடப்பட்டுள்ளது.




இப்புத்தகத்திற்கான கருத்தையும் எழுத்தையும் லெஹ் வெர்ஷீஸ், ரன்ஞ்சனா மற்றும் மேதா சுந்தர் ஆகியோர் தொகுத்து அளித்துள்ளனர். ஆசிரியருக்கான வழிகாட்டியாக, ஆசிரியர்களுக்கான படக்கதைப் புத்தகமாக, வரலாற்றை பதிவு செய்வது என்பதற்கானதாக இப்புத்தகத்தைக் குறிப்பிடலாம். 2014 - ல் வெளிவந்த முக்கியமான புத்தகங்களில் ஒன்றாகவே நான் இதைக் கருதுகிறேன்.

**புத்தகம் பேசுகிறது:**

“பண்டையகால இந்தியாவில் மனிதர்கள் சேர்ந்து வாழ்ந்தனர் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஆண் பெண் பாகுபாடு, ஆண்டான் அடிமைவேறுபாடுஎன எதுவும் இல்லாமல் வாழ்ந்து வந்தனர். காலப்போக்கில் மனிதர்களுக்கிடையே பல பிளவுகள் ஏற்பட்டன. யாருக்கு எந்த நிலம், யார் பெரியவன், யார் தலையிலிருந்து பிறந்தவன், யார் எந்த வேலை செய்யவேண்டும், பெண் என்றால் எப்படியிருக்க வேண்டும் என்பது போன்ற பல்வேறு விதிமுறைகள் நடைமுறைகள் தின வாழ்வில் சூழ்ந்து கொண்டது. இது ஒரு குறிப்பிட்ட சிலருக்குச் சாதகமாகவும் பலருக்கு எதிரானதாகவும் இருந்தது.” எனத் துவங்குகிறது இப்புத்தகம். இப்படியிருந்த காலத்தில் நடந்த அநீதிகளைக் களைவதற்கு உறுதுணையாக இருந்த பலரைப் பற்றி நாம் படித்திருக்கிறோம். நாம் படிக்காத ஒருவர் தான் சாவித்ரிபாய். அதிலும் கல்விப்பணியின் மூலமாக பெண்கள்

சமூகத்தையும் சாதியப் படிநிலையில் ஒடுக்கப்பட்ட சமூகத்தையும் முன்னேற்றிய மாபெரும் பணியைச் செய்தவர் சாவித்ரி என்பதை ஆசிரியர்களாகிய நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

“இப்படியான சூழலில் 1845 ஆம் ஆண்டு பிறந்தவர்தான் சாவித்ரிபாய். எல்லா பெற்றோரையும் போல் சாவித்ரியின் பெற்றோரும் பெண் பிள்ளையா என்று விரக்தியோடு கூறியிருக்கலாம். ஏனென்றால் பெண்பிள்ளைகள் முக்கியமானவர்கள் என்ற கருத்து அன்று இல்லை. சாவித்ரி ரொம்ப சுட்டிப் பெண்ணாகச் சுற்றிவந்தாள். விளையாடுவது, கேள்விகள் கேட்பது, சுற்றித்திரிவது எனத் துறு துறுவென வளர்ந்து வந்தாள். போதாதற்கு நல்ல தைரியசாலியாகவும் இருந்தாள். ஒருமுறை மரமேறிய ஒரு பையன் மரத்தில் பாம்பைப் பார்த்ததும் பயந்துபோனான்; கீழிறங்க முடியாமல் அழுதுகொண்டிருந்தான். குடுகுடுவென மரத்தின்மீதேறிப் பாம்பைப் பிடித்துத் தூக்கி எறிந்தாள் குட்டி சாவித்ரி.”

இப்படிப் பிறந்து வளர்ந்த சாவித்ரிக்கு 9 வயதில், 12 வயதுடைய ஜோதிபா ஃபூலேயுடன் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்குப் பிறகு கணவர் ஃபூலே படிக்கச் செல்கிறார். அவரது ஆசிரியர் முற்போக்குச் சிந்தனையும் பெண்கல்விமீது அக்கறையும் சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்குபவராகவும் இருக்கிறார். இத்தாக்கத்தில் மனைவிக்கு எழுத்தறிவு கற்றுக்கொடுத்தார். அதோடு சாவித்ரி பள்ளி ஒன்றைத் துவங்கவும் உதவுகிறார். ‘பெண்களுக்குக் கல்வியா?’ என்ற அக்கால சமூகக் கோவங்களை இருவரும் மாறி மாறி எதிர்கொள்கின்றனர். இப்புத்தகம் நம் சமூகம் நல்லெண்ணத்தைத் தாக்கும் விதத்தையும், அதை அவர்கள் இருவரும் கடந்து வந்த முறையையும் தெளிவாகச் சித்தரிக்கிறது. பெண்கல்வி என்ற ஆயுதத்தின் மூலமாக அவர்கள் சாதியப் பிரச்சனை, விதவைகள் பிரச்சனை, ஏமாற்றப்படும் பெண்களின் பிரச்சனை எனப் பல்வேறு சமூக பிரச்சனைகளில் ஈடுபடுகின்றனர். நியாயத்திற்கான அவர்களது ஒவ்வொரு செயல்பாடுகளையும் இச்சமூகம் எதிர்த்த முறை கேவலமானதாக இருந்திருக்கிறது.

- அவர் தெருவில் நடக்கும்பொழுது அவர்மீது சாணியைக் கரைத்து ஊற்றுவது,
- அவர்கள் இருவரையும் வீட்டைவிட்டே துரத்தவேண்டுமென்று பெற்றோரை நிர்பந்திப்பது.
- அவர்கள் தத்தெடுத்து வளர்த்த பிள்ளையை கொள்ளி வைக்கவிடாமல் தடுத்தது என



அடுக்கிக்கொண்டே போகலாம்.




இதுபோன்று, அவர்களுக்குத் துன்பம் ஏற்படும்பொழுது அதை அவர்கள் கையாண்ட விதத்தை இப்புத்தகம் அழகாகச் சித்தரிக்கிறது. சாவித்ரி தெருவில் நடக்கும்பொழுது சாணியை ஊற்றினால், மாற்றிக்கொள்வதற்கு மாற்றுப்புடவையைப் பள்ளிக்கு எடுத்துச் செல்கிறார். மகனை கொள்ளிவைக்க விடாதபொழுது கணவருக்குத் தானே கொள்ளி வைக்கிறார். காதல் திருமணங்களை நடத்தி வைக்கிறார். இப்படி இவர் வாழ்க்கைக் கல்வி, சமூகமாற்றம், சமூக நீதி என்று பயனுள்ள வகையில் கழிந்திருக்கிறது.

**கல்விப்பணியில் சாவித்ரி**:

அரசு பள்ளி ஆசிரியையாகிய எனக்கு நான் செய்ய வேண்டிய பல விதமான வேலைகளுக்குப் பாடமாக இருகின்றது இப்புத்தகம். குறிப்பாக, நாம் தினம் தினம் அலுத்துக்கொள்ளும் விஷயங்களில் ஒன்று நம் மாணவர்களின் சமூகப் பின்னணி. குறிப்பிட்ட பின்னணியிலிருந்து வரும் மாணவர்களைக் கல்வியின் மூலம் முன்னேற்ற வேண்டுமென்பதற்காக நாம் பணியாற்றுகிறோம். இப்பணி ஈடுபாடுடையதாக ஆகும்பொழுது நம் வேலை எப்படி இருக்கும் என்பதற்கு உதாரணமாக விளங்குகிறார் சாவித்ரி. புத்தகத்தின் ஒவ்வொரு வரிகளும் முக்கியமானது. கல்விக்கு அவர் ஆற்றிய பணி எவ்வளவு முக்கியம் என்றெண்ணிய இடங்களில் சிலவற்றை மட்டும் இங்கு பார்ப்போம்.

- பெண்களுக்கென்று ஆரம்பித்த பள்ளி - பல்வேறு பரிணாமங்கள், எண்ணிக்கைகள், மாற்றங்களை எட்டுகிறது. அவர்களது பள்ளி பற்றி மே 29 -1852 ஆம் ஆண்டு, 'பூனா அப்செர்வெர் (The Poona Observer)' என்ற பத்திரிக்கை இவ்வாறு செய்தி வெளியிட்டது. "பூலேவின் பள்ளியில் பயின்ற பெண்களின் எண்ணிக்கை அரசு பள்ளியில் படிக்கும் ஆண்களின் எண்ணிக்கையைவிட 10 மடங்கு அதிகமாக இருந்தது. அதோடு இங்குள்ள பெண்களுக்குப் போதிக்கும் போதனாமுறையும் அரசு பள்ளியைக்காட்டிலும் பல மடங்கு நவீனமானதாக இருந்தது. இந்நிலை தொடருமானால் பூலேவின் பள்ளியில் படிக்கும் பெண்கள், அரசுப்பள்ளியில் படிக்கும் ஆண்களைவிட பல மடங்கு உயர்ந்த நிலையை அடைவர். வரும் தேர்வில் இப்பள்ளியிலுள்ள பெண்கள் பெரும் வெற்றியைத் தழுவுவதற்கான

வாய்ப்பு இருக்கிறது. அரசு பள்ளிக் கல்வித்துறை இது தொடர்பாக, உடனடியாகச் செயலாற்ற வேண்டியுள்ளது. இப்பெண்களின் அபார கல்வியறிவு ஆண்களைத் தலைகுனிய வைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.” என்று குறிப்பிட்டுள்ளது.

- 1852-ல் பூலேவும் சாவித்திரியும் நிறைய பள்ளிகள் துவங்கியதற்காகப் பாராட்டு விழா ஒன்றை அரசாங்கம் ஏற்பாடு செய்தது.
- பூனாவிற்கு அருகிலுள்ள ஊர்களிலுள்ள பெண்கள் தங்கிப் படிப்பதற்கான விடுதியைத் துவங்கினார்.
- பாடங்களைக் குழந்தைகள் விரும்பிப் படிக்கும்படியாக மாற்றியமைக்க வேண்டும். கல்வியின் அவசியத்தைப் பெற்றோர்களுக்குப் புரியவைக்க வேண்டும். அவர்கள் கல்வி கற்றிருந்தால் குழந்தைகள் கல்வி கற்கவேண்டிய அவசியத்தை உணரமுடியும். அதனால் நாம் பெரியவர்களுக்கான எழுத்தறிவுத் திட்டத்தைத் துவங்க வேண்டும்.
- அதில் தங்கிப் படித்த லக்ஸ்மன் கரடி ஜயா என்பவர் தன் அனுபவத்தை இவ்வாறு நினைவுகூறுகிறார். “அன்பும் இரக்கமும் ஒருங்கே பெற்றவர் சாவித்ரி. நான் இன்றுவரை அவரைப்போன்ற இன்னொருவரை சந்திக்கவே இல்லை. அம்மாவைவிட அதிகமான அன்பை எங்களுக்கு வழங்கியவர்”
- வேறொரு மாணவி மகது ஐது வாகொல் என்பவர் எழுதியதில், “ஏழைகளிடமும், வறியவர்களிடமும் எப்படி கருணையோடு இருக்க வேண்டுமென்பதற்கு உதாரணமானவர்”.

உண்மையைச் சொல்ல வேண்டுமானால் புத்தகத்திலுள்ள எதைச் சொல்வது, எதைச் சொல்லாமல் விடுவது என்ற குழப்பம்தான் எனக்கு உண்டானது. இப்புத்தகத்தின் கடைசிப்பகுதி சாவித்ரி எவ்வாறு இறந்தார் என்பதைக் குறிப்பிடுகிறது. அவர் ப்ளேக் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காகப் பணியாற்றிய பொழுது அந்நோய் சாவித்ரியையும் தாக்கியது. ப்ளேக் இவரது உயிரையும் எடுத்துக் கொண்டது.

‘மடிந்துவிடாது வாழ்க்கை’ என்பதை இவர்கள் ஆற்றிய பணி வரலாறாக்கி வழி காட்டிக் கொண்டிருக்கிறது. இருந்த போதும் நான் இவர்களை அறிந்துகொள்ள இவ்வளவு ஆண்டுகளைக் கடக்க வேண்டியிருந்தது. எனக்குத் தேடல் போதவில்லையோ அல்லது இவர் பற்றிய செய்திகள் மறைக்கப் பட்டுவிட்டதோ என்பது போன்ற கேள்விகளை என் மனம் விடாமல் கேட்டுக் கொண்டேயிருக்கிறது.



**து .சங்கரதேவி**, தொ.ப.ஆ, அரசு நடுநிலைப் பள்ளி, ஆதிங்கபட்டு